விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்

2025 November 1-15

ஓடிசுய ஆரம்பம்

இன்று

ஈ இதழ்



இன்று

உனக்கென்ன
அப்படியோர் ஆசை என்று
தெரியவில்லை!
*இன்று
பெய்து கொண்டிருக்கிற
அந்த அடைமழையில்
நின்றபடியே நனைந்து
என்னைக்
குளிர்விக்கிறாய்!
சொட்டுச் சொட்டாய்
உன்னிடமிருந்து
விழும் நீர்த்திவலைகள்
எனக்குள்
குட்டிக் குட்டிக்
கவிதைகளாய்
இறங்குகிறது!
*இன்று
இந்த மழையில்
நனைவதைப் போல்
அன்றிலிருந்து
*இன்று வரை
என்னை
உன்
கா த லி லு ம்
நனைய வைப்பவள்
நீ!
நீ
என்றுமே
எனக்கென்றான
பிறகு
இந்தக்
கா த ல்
ஒவ்வொரு நொடியும்
எனக்குள்
இறங்குவதென ஒன்றையே
கொள்கையாக்கிக் கொண்டது!

முத்து ஆனந்த், வேலூர்
(தமிழக எழுத்தாளர் குழுமம்
வாட்சப் குரூப்பில்
வெளியானது)

அனைவருக்கும்

தீபாவளி இனிதாய் முடிந்தது. இனி அடுத்த புது வருடம்...

புது வருடத்திலிருந்து இன்று இதழுடன் முழு வித்தியாசமாய் இலவசமாய் இன்னொரு இதழும் வெளியாகிறது.

அது இதுவரை நீங்கள் பார்த்திராத வகையில் புதிதாய் உதயமாக இருக்கிறது...

விபரங்கள் அடுத்த இதழில்..

அனைவருக்கும் நன்றி...

வெ.கோபிநாத், ஆசிரியர்.

November 2025

Mon	Tue	Wed	Thu	Fri	Sat	Sun
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

முத்துக் கவிதைகள்



முத்து ஆனந்த் வேலூர் ✆ 7010482479

வேலை

நான்
வேலையில்லாத நேரங்களில்
உன்னை நினைக்கிறேன்!
நீயோ
என்னை நினைப்பதையே
ஒரு வேலையாக
வைத்திருக்கிறாய்!

அழகல்ல.... பேரழகு!

நீ
எது செய்தாலும்
இத்தனை அழகாக இருக்கிறதே!
நீ
காதல் செய்தால்
இன்னும்
எத்தனை அழகாக இருக்கும்!

கண்ணாமூச்சி

சுடிதார் துப்பட்டாவை
இழுத்துப் போர்த்துகிறாய்!
எனக்குக்
கண்ணாமூச்சி
ஆட்டம் காட்டுகிறது
உனது அழகு!

போய் வருகிறேன்!

போய் வருகிறேன் என்று
என்னைத் தவிர
எல்லோரிடமும்
சொல்லி விட்டு நகர்கிறாய்!
அது சரி
நீ செல்லாமல்
என் மனதிலேயே இருப்பது
உனக்கும் எனக்கும் மட்டும்
தானே தெரியும்!



கவி பூ

லி.நௌஷாத் கான் ✆ 971561093550

என்ன
வேண்டுமென்கிறாய்?
இப்போதைக்கு
ஒரு கோப்பை முத்தம்!

ஆடும் வரை
உணரவே வில்லை
அற்பம்-இந்த
மனித வாழ்க்கையென்று!

உன்னை மாற்ற
யாராலும் முடியாது.
நீயே மாறினால் தான் உண்டு
தேவதை என்பது
கனவு மட்டுமே-அது
நிஜத்தில் ஒரு போதும்
வருவதில்லை

சரியோ,
தவறோ தெரியாது.
நதி போலச் செல்ல
வழி விடுங்கள்-அந்த
பரிசுத்த காதலுக்கு!

காதலால் மட்டுமே
கரடுமுரடான
வாழ்க்கை கூட
சுகமாகிறது!

வண்ணங்களில் இல்லை
எண்ணங்களை
பரிசுத்தமாக்கிக் கொள்
நீ பேரழகாவாய்!

இளவேனிற்கால மரத்தை
கடந்து செல்கிறது காற்று
மௌனமாய்.!

•●•

நிலவை எட்டுவதை விட
நிலவை கடப்பது எளிதாய் இருக்கிறது
பறவைக்கு..!

•●•

சூரியனை விட நிலவு பிடிக்கும்தான்
ஆனாலும் என்ன
சூரியனுடன்தான் கழிகிறது
நெடும் பொழுது..!


•●•

கூரைகளற்றவனின் குடிசையிலும்
சொந்த வீட்டில்தான் வசிக்கிறது
நத்தை..!

•●•

வங்கியில் கடன் வாங்கி
வீடு கட்டி குடியேறினேன்
சொந்தமாக கூடு கட்டி
குடி வந்தன குருவிகள்.

:- வீ.வைகை சுரேஷ்.



எதிர் பார்த்தேன்
அவள் என்னை
அனணத்து கொள்வாளென
நடக்கவில்லை என யோசிக்க
அனணத்து கொண்டாள்
என்னை
பரவாயில்லையே
என நிமிர்ந்த பொழுது
சுவற்றில் இருந்தது பல்லி



கே.அசோகன்

Free Advertisement















வெள்ளி கொலுசு
செய்பவனுக்கு
தெரிந்திருக்க வில்லை
அந்த கொலுசு
முந்தைய காதலியின்
கால்களை
அலங்கரிக்க
போகிறதென



கே.அசோகன்



மலரில்
தேன் உறிஞ்சும்
வண்ணத்து பூச்சி
சற்று நேரம்
நிறுத்தி விட்டு
முத்தமிட்டு
கொண்டிருக்கும்
காதலர்களையும்
கவனித்தது

கே.அசோகன்

கொஞ்சும்
காதலர்களை
பார்த்து
கொஞ்ச பூக்கள்
தலை குனிந்தன
நாணத்தால்
பூங்காவில்

கே.அசோகன்





அகம் காட்டா அலைபேசி



சசிகலா விஸ்வநாதன்

அலைபேசி பேச்சு
அகம் காட்டுமா?

தொலை பேசி பேச்சு
முகம் மட்டும் காட்டும்!

மலையாய் நின்ற
தொலைவில் நான்

குலையாத கன வொன்று
சலியாமல் கண்டேன்

தினம் தினம்
உன் குரல்

கேட்டேன் ; கனவில்
மட்டும் தான்.

நினைவாகக்கூடாதா;
இனியாவது?

பேசி பழகாத உறவு

அறுந்த நூல்
எனக் கொள்.

எனக்கென நேரம்
தேர்வு செய்யலாகாதா

நான் விரும்புவது,

உன் விருப்பம் ஆகுமா?



ஸ்பீடு கதைகள்

முத்து ஆனந்த் வேலூர்

நிலைமை

"என்னம்மா, எப்பப்பாரு எழுதிக்கிட்டிருக்காரு இந்த அப்பா. எனக்கு 'செம கடுப்பா' இருக்கு, போரடிக்குது! " என்று கோபமாக வீட்டிலிருந்து வெளியே சென்றாள் எழுத்தாளர் செல்வேந்திரனின் பத்து வயது மகள் அனுப்ரியா!

ரிபீட்

"என்னங்க, எப்ப கடைக்கு அனுப்பினாலும் 'மீதிக் காசை'க் கொண்டு வந்தே கொடுக்க மாட்டேங்கறாங்க நம்ம பாலு!" என்று அலுத்துக் கொண்டாள் ரேஷனில் வேலை செய்யும் வேணுகோபாலின் மனைவி சந்திரகுமாரி!

டைம்

"இந்த பேனை எப்ப 'சரி' பண்ணப் போறீங்கப்பா?" என்று கத்திய மகளுக்கு 'டைமே இல்லம்மா' இன்னும் ரெண்டு நாள்ல சரி பண்ணிடறேம்மா!" என்றார் எலக்ட்ரிஷியன் சந்திரபாபு!

கவலை

"எதுக்கெடுத்தாலும் 'பொய்' சொல்றான்!" என்று நண்பரிடம் தன் 'மகனை'ப் பற்றி மிக 'விரக்தி'யாகச் சொல்லிக் கொண்டிருந்தார் ஜட்ஜ் வேதநாயகம்!





இன்று ஈ இதழ் சார்பாக **எழுதலாம் வாங்க** என்ற வாட்சப் குழுவில் **எனக்கு பிடித்த சினிமா பாட்டு** என்ற தலைப்பில் போட்டி வைக்கப்பட்டது. அதில் வெற்றி பெற்ற பாட்டு...

படம்: நெஞ்சில் ஓர் ஆலயம்.
இசை: M S V
பாடலாரியர் : கவிஞர் கண்ணதாசன்.
பாடல்: " சொன்னது நீ தானா...சொல்...
சொல் என் உயிரே.."

இந்த பாடலில் வெளி நாட்டு படபிடிப்போ...
பிரமாண்ட அரங்க அமைப்போ கிடையாது...

இருபதுக்கு இருபது சின்ன மருத்துவமனை அறையில்
மிக நேர்த்தியாக படமாக்கப் பட்டிருக்கும்.

நாயகன் கட்டில் மேலே...நாயகி கையில் வீணையுடன்
தரையில் அமர்ந்து பாடும் அந்த பாடலை
கேட்டாலே படம் பார்க்காதவர்களுக்கும் கதை புரிந்து
விடும்.

அந்த பாடலில் வரும்
"தெய்வத்து மார்பினில் கூட்டிய மாலை தெருவினில்
விழலாமா..? தெருவினிலே விழுந்தாலும் வேறு ஓர் கை
தொடலாமா..?" என்ற வரிகளில்
அத்தனை அர்த்தங்கள் புதைந்து கிடக்கும்.
சுசிலாம்மாவின் குரலும்...தேவிகாவின்
முகபாவ நடிப்பும் அற்புதமாக இருக்கும்.
மெல்லிசை மன்னர் MSV இசை நெஞ்சை உருக்கும்....

மிக நேர்த்தியான
அனைத்து அம்சங்களும் நிறைந்த இந்தப்
பாடலே எனக்கு மிகவும் பிடித்த சினிமா பாடல்.

- G.Sundaramurthi, Musiri.



மினி கதை

மலர்மதி வேலூர் 8667417874

பால்

“குழந்தைக்குப் பால் வாங்க காசு கொடுங்க.” என்று கேட்ட மனைவியிடம் எரிந்து விழுந்தான் ராஜசேகர்.

அன்று மாலையில் நடந்த விழாவில் நடிகனின் கட்-அவுட்டுக்கு குடம், குடமாய் பால் ஊற்றி பாலாபிஷேகம் நடத்தினான் ரசிகர் மன்ற தலைவனான ராஜசேகர்.

வரம்

உன்னைச் சேரும்- வரம்
எனக்கு கிடைக்குமென்றால்
காலம் முழுக்க உன்
காலடியில் கிடப்பேன்
சாகா வரம் கேட்டு!
உன்னைச் சேராத-
சாபம்
எனக்கு கிடைக்குமென்றால்
இப்பொழுதே
இறந்து விடுவேன்
அந்த எமனிடம்
சாகும் வரம் கேட்டு!




பாரதி முத்து
ஓட்டேரி வேலூர்



இன்று-வின்
பழைய இதழ்கள்
படிக்க வேண்டுமா?

www.indhru.in

பார்வையிடுங்கள்



கோவை கவி புவனா



மஞ்சள் பூசி
மையிட்டுப் பொட்டிட்டு
மலர் முகம் சிவந்து
மன்னவனே
உனக்காக
விரதமுமிருந்து
வேண்டிக்கிட்டேன்!
நம் குலதெய்வத்தை
என்றென்றும்
உன் கரம் பற்றிடவே...!

அத்தான் மனதில்
அனுதினமும் நிறைந்திடவே
ஆறுமுகனை வேண்டி
அகல்விளக்கு ஏற்றினேன்!
நாடி வரும்
துயரமெல்லாம்
சூரியனைக் கண்ட
பனிபோல் விலகிடவே...!



செல்:7094053241
www.indhru.in
indhrumail@gmail.com

ஆபிரகாம் லிங்கன் அமேரிக்க அதிபராக இருந்த காலம் முழுவதும் அவரது பூட்ஸை அவரே துடைத்துக் கொண்டாராம்.



பி.ஆர்.கிரிஜா சென்னை

ஆதங்கம் !

பல்லாயிரம் ஆதங்க அலைகள், மனித மனதில்;

பள்ளு பாட விடாமல் பரிதவிப்பு மனதோரத்தில் !

பெண்ணின் ஆதங்கம் கல்வி !

இளைஞனின் ஆதங்கம் பணி நிரந்தரம் !

பெற்றோரின் ஆதங்கம் பிள்ளைகள் கரையேற்றம் !

பாட்டியின் ஆதங்கம் ஊன்றுகோல் மேல் !

பால்காரர் ஆதங்கம் கறவை மாடு மேல் !

நடிகையின் ஆதங்கம் முன் நெற்றி நரை !

நடிகனின் ஆதங்கம் பட வெளியீடு !

பூசாரியின் ஆதங்கம் ஊர்த் திருவிழா !

யாசகனின் ஆதங்கம் அன்னதான நேரம் !

செல்வந்தரின் ஆதங்கம் கோடிகளின் மேல் !

வறியவனின் ஆதங்கம் வயிற்றுப் பசி !

முடிவிலா ஆதங்க அலை ; மன நிறைவு கொள் ;

அலையில்லா ஆனந்தப் பொய்கையாகும் மனது !

"மன்னரிடம், ஏதோ வெளிப்படையா பேசணும்னு போனீங்களே... பேசினீர்களா அமைச்சரே?"

"மன்னா! வெளிப்படைன்னு ஆரம்பிக்கவுமே மிரண்டு ஓடிவிட்டார் மகாராணி?"

சு.அருண் பிரகாஷ்



மு.முபாரக் 81483 95936

இன்னும் கொஞ்ச நேரம்
அவனோடு பேசியிருக்கலாம்,
இன்னும் கொஞ்ச நேரம்
அவனோடு பயணித்திருக்கலாம்,
அவன் கேட்டதை கொடுத்திருக்கலாம்,
அவனுக்கு என்னென்ன
பிடிக்குமென தெரிந்து கொண்டிருக்கலாம்,
அவன் மழையில் நனைந்து விளையாடும் போது
அவனோடு சேர்ந்து விளையாடியிருக்கலாம்,
அவன் தொந்தரவு செய்கிறானென சொன்ன
புகார்களை சொல்லாமல் இருந்திருக்கலாம்,
இந்த எண்ணங்கள்
எனக்குள் தோன்றாமலிருக்க
இன்னும் சில காலம், அவன் வாழ்ந்திருக்கலாம்!



திருடப்போன வீட்டுல கார் இருந்தும்
ஏன் சைக்கிளை மட்டும் திருடினே?

பெட்ரோல் போட்டு கட்டுப்படியாகாதுன்னு தான் எஜமான்!

சி. ஆர். ஹரிஹரன்,
ஆலுவா, கேரளா.



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி ✆99442 84135

எவை எவை மருந்துகள்

1. சீக்கிரம் தூங்கி சீக்கிரம் எழுவது மருந்து.

2. காலையில் இறைவனை நினைப்பது மருந்து.

3. யோகா, பிராணாயாமம் மற்றும் உடற்பயிற்சி ஆகியவை மருந்து.

4. காலை, மாலை நடைப்பயிற்சியும் மருந்தாகும்.

5. நோன்பு அனைத்து நோய்களுக்கும் மருந்து.

6. சூரிய ஒளியும் ஒரு மருந்துதான்.

7. தண்ணீர் குடிப்பதும் ஒரு மருந்து.

8. கைதட்டலும் மருந்துதான்.

9. அதிகம் மெல்லுவதும் மருந்துதான்.

10. உணவைப் போலவே, மெல்லும் நீர் மற்றும் குடிநீரும் ஒரு மருந்து.

11. உணவுக்குப் பின் வஜ்ராசனத்தில் அமர்வது மருந்தாகும்.

12. மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற முடிவும் மருந்தாகும்.

13. சில சமயங்களில் மௌனமும் மருந்தாகும்.

14. சிரிப்பும் கேலியும் மருந்து.

15. மனநிறைவும் மருந்துதான்.



ஒ.மூர்த்தி
புல்லரம்பாக்கம் -9600886441

வாழத்தெரியவில்லை எனக்கு

அதிர்ந்து பேசத் தெரியாது எனக்கு
யாரிடமும் வஞ்சம் காட்டத் தெரியாது எனக்கு
புரளி பேசத் தெரியாது எனக்கு
யாருடைய சந்தோஷத்தையும் திருடத் தெரியாது எனக்கு
போலியாக நடிக்கத் தெரியாது எனக்கு
புன்னகையில் நஞ்சை கலக்கத் தெரியாது எனக்கு
வேற்றுமையை விதைக்கத் தெரியாது எனக்கு
ஒற்றைமையைக் குலைக்கத் தெரியாது எனக்கு
பகைமைக்கு உரமிடத் தெரியாது எனக்கு
பண்பை மறந்து பழகத் தெரியாது எனக்கு
அடுத்தவர்களைப் பரிகாசிக்கத் தெரியாது எனக்கு
பிறர் உழைப்பில் வாழப் பிடிக்காது எனக்கு
தன்மானத்தை விற்பனை செய்யக் தெரியாது
எனக்கு தலைக்கனத்துடன் ஆடவும் தெரியாது எனக்கு
கொடுஞ்சொற்கள் பேசத் தெரியாது எனக்கு
துயருற்றவர்களைக்கண்டு சகிக்க முடியாது எனக்கு
இப்படித்தான் ஒழுக்க நெறியுடன் உயர்வாழ்கை
வாழ விரும்பினேன் நான் ,ஆனால்
இந்த உலகமே ஒன்று திரண்டு வந்து என் செவியில்
சொன்னது வாழத்தெரியவில்லை உனக்கு என்று.


தலைவர் எதுக்கு கடுப்பாயிட்டார்?

அவரோட பிறந்தநாள் பேனர்ல 61 வது பிறந்தநாள்ன்னு போடறதுக்குப்பதிலா 91 வது பிறந்தநாள்ன்னு போட்டுட்டாங்களாம்.



எனக்கு மேல மேலப்
படிக்கனுமுன்னு ஆசைடா?

எல்லோரும் மேலேயிருந்து
கீழ்நோக்கிதானேடா படிப்பாங்க



டீ.என்.பாலகிருஷ்ணன்
மடிப்பாக்கம் ✆ 9884808965

இரு தாத்தாக்கள்:

"என் பேரன் திடீர்னு சாமியாராயிட்டான்!"



"அப்போ 'பேராண்டி'னு சொல்லுங்க!"

இரண்டு நபர்கள்:



"எங்க வீட்டுக்கு நேத்து food டெலிவரி பண்ண வந்த பையன் ரொம்ப பசியா இருந்தான் போல"

"ஏன் என்னாச்சு?"

"டெலிவரி பண்ணின உடனே நான் டிப்ஸ் தந்ததுக்கு, 'டிப்ஸ் வேணாம், சிப்ஸ் இருந்தா தாங்க'ன்னு கேட்டு வாங்கி தின்னுட்டுப் போனான் "

நீதிபதி : நீ வீடு பூந்து திருடினது உண்மையா?



திருடன் : அவங்க நகை பணத்தையெல்லாம் வீட்டுக்கு வெளில வெச்சிருந்தா நான் ஏன் உள்ளே பூரப் போறேன் எஜமான்



திருச்சிற்றம்பலம் சுரேஷ்
9092142678

மின்னல் கதைகள்

ஜாமீன்

இனி..அம்மாவின் சொல்படி...நடக்க வேண்டும் என்பதை முதல் முறையாக உணர்ந்தான் கார்த்திக். அம்மாவின் சொந்த ஜாமினில் வந்த அவன்.

மரணத்தில்...

நண்பனுக்கு போன் செய்யும் பொழுது." அம்மா எப்படி இருக்கிறார்கள்"? என்பதை...இனி கேட்க முடியாது என்ற வருத்ததை.. மனதில் தாங்கி நின்றான்.. மரணத்தில் கலந்து கொண்டு.

வட்டி

வட்டிக்கு பணம் வாங்கி..அதில் கிடைத்த பணத்தை கொண்டு..பாலை கேணில்..சுமந்து...தியேட்டர் முன் நின்றான். கட்அவுட்டுக்கு பால் அபிஷேகம் செய்ய.

தண்டனை

நீதிபதி... தனக்கான தண்டனை தந்தபின்.தான் எப்படிப்பட்ட தவறு செய்து விட்டோம் என்பதை உணர்ந்தான் .மனைவியின் மேல் இருந்த கோபத்தில்..பிள்ளையை கொன்ற வெங்கடேசன்.

பலகாரம்

வயிற்று வலி என்றால் என்ன?. என்பதை முதல்முறையாக..உணர்ந்தான்..வடிவேல்.மனைவியின் தீபாவளி பலகாரம் மூலமாக.

புலவர் 1 : அரசரரை புகழும் ஒரே பாடலை பலமுறை அரசர் முன் படித்துக்காட்டி நீர் பரிசு பெற்று சென்றதை அரசர் எப்படி கண்டுபிடித்தார்?

புலவர் 2: அரசர் கண்டுபிடிக்கவில்லை, வெண்சாமரம் வீசும் பெண் கண்டுபிடித்து அரசரிடம் போட்டுக்கொடுத்து விட்டாள்.

ஒருவர் : அந்த ஸ்கூலுக்கு சீல் வைக்கிறாங்களே! ஏன்?

அடுத்தவர் : சம்பளம் கம்மியா கொடுத்தா போதும் என்பதற்காக தமிழ் தெரியாத வடமாநில தொழிலாளியை தமிழ் ஆசிரியர்களாக நியமிச்சிருக்காங்க!

நாஞ்சில் சு.நாகராஜன்
பறக்கை, கன்னியாகுமரி ✆-9486387026

உகாண்டாவை ஆண்ட சர்வாதிகாரி "இடி அமீன்" , ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்கள் கூட்டத்துக்கு ஒருமுறை பல்லக்கு போன்ற வாகனத்தில் போனார்.

வலையில் வந்தது...



பேங்க்லயோ பைனான்ஸ்லயோ கிடைக்காத
ஒரு கடன் பாக்கி இருக்கு ....

அப்படி என்ன கடன் ?

குலதெய்வம் கோயிலுக்குச் செய்ய வேண்டிய
நேர்த்திக்
கடன் பாக்கி இருக்கு .....
.
மொட்டை அடிக்கப் போறதுக்கு எதுக்குடா
இவ்வளவு பந்தா?

எம் அசோக்ராஜா



" பதுங்குகுழியை ரொம்ப ஆழமா
தோண்டி விட்டோமோ!?"

" என்னாச்சு?"

"பெட்ரோல் ஊற்றெடுக்கிறது மன்னா!"

– கயத்தை சத்யா

வை... கூ...

மல்லிகை

வானத்து விண்மீன்கள்/
வாசனைப் பூக்களாய்/
என் மாடித் தோட்டத்தில்.

– இல. தமிழ்க்குயில்,
சங்கராபுரம்.



கூண்டுக் கிளி

கூண்டுக் கிளி/
எடுத்த சீட்டில் இருந்தது/
சுதந்திரப் பறவை.

சாய் செந்தில்,
சங்கராபுரம்.

காகிதப் பூ

ரோசாப் பூ/
காகிதப் பூவானது/
என் காதல் கடித்தத்தை சுமந்ததால்.

சாய் செந்தில்,
சங்கராபுரம்.

அவசரம்

அவசரமாய் போனவனின்/
உயிரைக் காக்க/
அவசரமாய் போனது ஆம்புலன்ஸ்.


சாய் செந்தில்,
சங்கராபுரம்.






கண்ணாடிப் பக்கம்


அமைப்பு


கடிக்கும் கொசுவை
அடிக்காமல் ஊதினால்
நீயும் புத்தபிட்சுவே....
நம்·திரு·ரஅம்ஏச்


கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே...
யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...
அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர்
ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241
நன்றி
இன்று இதழை படித்ததற்கு நன்றி